**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PORPOSED ROUGH STONE AND GRAVEL QUARRIES IN PATTA LAND OF**

I. **M/S.M.GANESAN ROUGH STONE AND GRAVEL QUARRY AT S.F NO. 320/1A, 1B,2, OVER AN EXTENT OF 1.98.0 HECTARES.**

II. **M/S.M.GANESAN ROUGH STONE AND GRAVEL QUARRY ATS.F NO. 323/1B, 2B, 2C , 3, 4, 5B,5C, OVER AN EXTENT OF 2.13.0 HECTARES.**

III. **M/S.M.GANESAN ROUGH STONE AND GRAVEL QUARRY AT S.F NO.324/1A,1B1,1B2,2A, 2B, 2C1, 2C2, 3, 8A, 9A, 9B2, OVER AN EXTENT OF 2.40.0 HACTARES,**

**TO BE CARRIED OUT IN CLUSTER AT SIRUTHAMUR VILLAGE, UTHRAMERUR TALUK, KANCHIPURAM DISTRICT ON 23.06.2023**

| | |
|---|---|
| Name of Project: | Proposed rough stone and gravel quarries of<br>i) M/s.M.Ganesan rough stone and gravel quarry at S.F No. 320/1A, 1B,2, over an extent of 1.98.0 Hectares,<br>ii) M/s.M.Ganesan rough stone and gravel quarry at S.F No. 323/1B, 2B, 2C, 3, 4,5B,5C, over an extent of 2.13.0 Hectares,<br>iii) M/s.M.Ganesan rough stone and gravel quarry at S.F No. 324/1A, 1B1, 1B2, 2A, 2B, 2C1, 2C2, 3, 8A, 9A, 9B2, over an extent of – 2.40.0 Hactares, Siruthamur Village, Uthramerur Taluk, Kanchipuram District. |
| Venue: | M/s. R. R. K. Mahal,<br>No.167- Thirumukoodal,<br>Thirumukoodal – Pinaiyur Road,<br>Uthiramerur Taluk, Kanchipuram District. |
| Date and Time: | 23.06.2023 10:30 A.M |
| Participants: | 1. Mr.M.Narayanan,<br>District Revenue Officer(L.A),<br>National Highway,<br>Kanchipuram District.<br>2. Er.K.Prakash,<br>District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur,<br>Kancheepuram District. |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Kancheepuram District, other Government Officials, Publics, Social & Environmental activists for the Public Hearing and informed that the proposed stone and gravel quarry of (I) M/s.M.Ganesanrough stone and Gravel Quarry at S.F No. 320/1A, 1B,2, over an extent of 1.98.0 Hectares, (II) M/s.M.Ganesan rough stone and Gravel Quarry at S.F No. 323/1B, 2B, 2C , 3, 4, 5B,5C, over an extent of 2.13.0 Hectares, (III) M/s.M.GanesanM/s.M.Ganesan rough stone and Gravel Quarry at S.F No.324/1A,1B1,1B2,2A, 2B, 2C1, 2C2, 3, 8A, 9A, 9B2, over an extent of 2.40.0 Hactares, Siruthamur Village, Uthramerur Taluk, Kanchipuram District have approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed rough stone and gravel quarries in cluster. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR) subject to one of the condition that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN.Based on that, the public hearing was arranged on today 23.06.2023 after getting approval from the District Collector, Kancheepuram District and public notice has been published as mandated in the newspapernamely "The New Indian Express" (English)& "Dhinakaran (Tamil)" on 16.05.2023.

On behalf of project proponents the Project Consultant will make power point presentation about the said proposed projects. After that the public present here canexpress their views, concerns andquestions if any by indicating their name and village name from where he /she belongs to and the same will be recorded.

Project consultant Thiru.Sheikh Nawaz explained about the detailed report of the proposed project through a power point presentation.

The views, concerns and questions of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1 | Mr. S. Kothandan, Arungunram, President, Siruthamur Panchayat. | Quarry owners should come forward to provide drinking water to our panchayat. A separate lane should be made for trucks.<br>Roads should be repaired before Quarry operation. Roads in Siruthamur area are not good, all roads in Tirumukodal area are dangerous and need to be repaired. |
| 2 | Mr. Amaran - PattaVice President, Sirudamur Panchayat. | Quarry vehicles mainly travel at high speeds above 40 kmph, so the speed of trucks should be controlled.<br>Roads should be repaired and water should be sprinkled because of excess dust. |
| 3 | Mr.Naresh.- Arungunram, | There is no problem with new the quarry proposed. The road needs to be sprayed with water three times a day, where the school is located. There is lot of traffic in this village, Already 300 trucks are operated in this area due to operation of 6 quarries. Allowing 4 more quarries will increase the number of 400 trucks and cause more congession.<br>There is a lot of dust flying on the road. No water sprinkler in the quarry area. There is a patholes in the road to the extent that a person can fall into it. People are unable to move because of this, the road facilities should be improved. |

| | | |
|---|---|---|
| 4 | Mr. Sundar, Patta | No bus facility. Busses are not arriving on time. Students unable to go to school on time. It would be good if the cement road is constructed, and that too before the quarry becomes operational. |
| 5 | Mr.Manokaran - Sirudamur | Quarries should be established.<br>On certain time only trucks shall be operated. They ply into village at high speed. Quarries should not be carried out near the watercourses and should be carried out in accordance with government regulations. |
| 6 | Mr.Santhoshkumar, Thirumukodal | Quarrying causes disturbance to school students. Plying within the village without taking the alternate road causes disturbance. Vehicles should not enter the village during night,<br>Vehicles should not come into village during school hours. Vehicle should have proper head lights.<br>All the loaded trucks are not covered with the tarpaulin and it causes inconvenience to the motorists on the road. |
| 7 | Mr.Murugan, Thirumukodal | There is no other problem, except the lorries getting into the village during school hours is a nuisance. It is enough to fix it. |
| 8 | Mr.Madhavan, Sirumaylur | Employment will be more due to the establishment of this quarry. Without Sirutamur Panchayat our Perumukkal Panchayat also has bad roads due to traffic. The roads should be repaired, water should be sprinkled three times. There is a lot of problem due to traffic. It should be repaired. |

| | | |
|---|---|---|
| 9 | Mr. Ajith, Arungunram. | The quarries here have been running since 2002-2003. 5 hillocks have been destroyed in Sirudamur village. 30 acres of land has been encroached on for quarying stones. 300 acres of agricultural land has been encroached by quarry owners and people are suffering without even a place to graze their goats and cows. Agriculture activity is being destroyed. .<br>Goats and cows are not even able to drink the water due to waste mixed in the lakes. Children can't go to school, potholes are there in roads, and everyone says the road is a problem, agriculture is the problem. Earlier almost 100 acres of agriculture land was irrigated, now there is no water in the canals, more than 100 canals have been destroyed, how can people move forward, The village can survive only by rearing cows and goats, agriculture is completely destroyed, so no quarrying to be done here. Please do not give permission. on behalf of the villagers. |
| 10 | Mr. P. Saravanan, Patta | There are some problems due to quarrying in Sirudamur panchayat village like, theft is rampant, people are more afraid, CCTV camera is needed for panchayat, trucks are speeding in the town, speed should be controlled, dust is flying too much in crusher, water should be sprinkled, water is not flowing to the lake through canals, canals should be repaired. Hence, It is necessary to provide necessary basic facilities to the public, without the |

| | | |
|---|---|---|
| | | resolution of the panchayat, the quarry is coming. Quarries whose lease period has expired should be fenced with wire. |

The public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer, Kancheepuram District, Officials, Public and NGO's and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**TNPCB, Sriperumbudur,**
**Kancheepuram District**

**Competent Authority/**
**District Revenue Officer (L.A),**
**National Highway, Kanchipuram**
**Kanchipuram District.**

(1)

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம்,**

i) **புல எண் 320/1A, 1B,2, பரப்பளவு – 1.98.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.**

ii) **புல எண் 323/1B, 2B, 2C, 3, 4, 5B,5C, பரப்பளவு – 2.13.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.**

iii) **புல எண் 324/1A,1B1,1B2,2A, 2B, 2C1, 2C2, 3, 8A, 9A, 9B2, பரப்பளவு – 2.40.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்**

**குழுமங்கள் குறித்த சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 23.06.2023 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம்,<br>i) புல எண் 320/1A, 1B,2, பரப்பளவு – 1.98.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.<br>ii) புல எண் 323/1B, 2B, 2C, 3, 4, 5B,5C, பரப்பளவு – 2.13.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம்.<br>iii) புல எண் 324/1A,1B1,1B2,2A, 2B, 2C1, 2C2, 3, 8A, 9A, 9B2, பரப்பளவு – 2.40.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் |
| இடம் | M/s.R. R. K.மஹால், 167–திருமுக்கூடல், திருமுக்கூடல் – பினையூர் சாலை, உத்திரமேரூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| நாள் மற்றும் நேரம் | 23.06.2023 காலை 10.30 மணி |
| பங்குபெற்றோர் | 1. திரு. மா. நாராயணன்,<br>மாவட்ட வருவாய் அலுவலர், (நி.எ)<br>தேசிய நெடுஞ்சாலை, காஞ்சிபுரம்<br>காஞ்சிபுரம் மாவட்டம்.<br><br>2. திரு. கு. பிரகாஷ்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திதர வருகைதந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை

அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், சிறுதாமூர் கிராமம், (i)புல எண் 320/1A, 1B,2, பரப்பளவு – 1.98.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் (ii) புல எண் 323/1B, 2B, 2C, 3, 4, 5B,5C, பரப்பளவு – 2.13.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம் (iii) புல எண் 324/1A,1B1,1B2,2A, 2B, 2C1, 2C2, 3, 8A, 9A, 9B2, பரப்பளவு – 2.40.0 ஹெக்டர் திரு.M.கணேசன் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கம், கல் மற்றும் கிராவல் எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் 19.09.2022 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 16.05.2023 அன்று **"தினகரன்"** என்கிற தமிழ் நாளிதழிலும் மற்றும் **"தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்"** என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 23.06.2023 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தினை இத்திட்ட ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

<u>பொது மக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்</u>

| வ.எண் | பெயர் மற்றும் கிராமம் | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | திரு.S.கோதண்டன்,<br>அருங்குன்றம்,<br>சிறுதாமூர் ஊராட்சி<br>மன்ற தலைவர் | ♦ குவாரி வருவதற்கு முன்னால் சாலைகளை சரி செய்ய வேண்டும், சிறுதாமூர் பகுதியில் சாலைகள் சரியில்லை, திருமுக்கூடல் பகுதியில் சாலைகள் அனைத்தும் அபாயமாக உள்ளது, அதனை சரி செய்ய வேண்டும்,<br>♦ எங்கள் பஞ்சாயத்திற்கு குடிநீர் வசதி செய்து தர குவாரி உரிமையாளர்கள் முன்வர வேண்டும், லாரிகள் செல்வதற்கு தனியாக பாதை அமைத்து தர வழிவகை செய்யவேண்டும். |
| 2 | திரு.அமரன் –பட்டா<br>சிறுதாமூர் ஊராட்சி<br>மன்ற<br>துணைத்தலைவர். | ♦ குவாரி வாகனங்கள் அதிகமான வேகத்தில் செல்கிறார்கள் மணிக்கு 40 கி.மீ வேகத்திற்கு மேல் செல்கிறார்கள். அதனால் லாரிகளின் வேகத்தை கட்டுப்படுத்த வேண்டும்.<br>♦ சாலைகளை சரி செய்து தரவேண்டும், தூசிகள் |

| | | |
|---|---|---|
| | | அதிகமாக பறப்பதால் தண்ணீர் தெளிக்க வேண்டும். |
| 3 | திரு.நரேஷ்.– அருங்குன்றம், | ♦ குவாரி வருவதால் எந்த பிரச்சனையும் இல்லை. சாலையில் தினமும் மூன்று முறை தண்ணீர் தெளிக்க வேண்டும், பள்ளி பகுதி இருக்கும் இடத்தில் அதிகமாக வாகனங்கள் செல்கின்றன, ஏற்கனவே 6 குவாரிகளுக்கு 300 லாரிகள் ஒரு நாளைக்கு செல்கிறது. மேலும் 4 குவாரிகளுக்கு அனுமதி அளித்தால் 400 லாரிகள் அதிகமாக செல்லும் மேலும் இடையூறுகள் அதிகமாக இருக்கும்.<br>♦ சாலையில் அதிகமாக தூசிகள் பறக்கின்றன தண்ணீர் தெளிப்பதே இல்லை, ஒரு ஆள் உள்ளே விழும் அளவிற்கு பள்ளம் இருக்கிறது.இதுபோன்று இருப்பதால் மக்கள் நடமாட முடியவில்லை, இதில் சாலை வசதிகளை முன்னேற்றம் செய்து தர வேண்டும் |
| 4 | திரு.சுந்தர், பட்டா | ♦ பேருந்து வசதி இல்லை, நேரத்திற்கு சரியாக வருவதில்லை, பள்ளி நேரத்திற்கு சரியாக மாணவர்கள் செல்ல முடியவில்லை, சிமெண்ட் சாலை அமைத்து தந்தால் நன்றாக இருக்கும், அதுவும் குவாரி செயல்பாட்டிற்கு வரும் முன்னால் செய்தால் பரவாயில்லை, பேருந்து வசதி உடனடியாக செய்து தர வேண்டும், நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. |
| 5 | திரு.மனோகரன் – சிறுதாமூர் | ♦ குவாரிகள் நடத்தப்பட வேண்டும்,<br>♦ குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே லாரி செல்ல வேண்டும், அதிக வேகத்தில் ஊருக்குள் செல்கின்றனர். நீர் நிலைக்கு அருகில் குவாரிகள் செயல்படுத்த கூடாது, அரசு விதிமுறைகளை பின்பற்றியே குவாரி செய்ய வேண்டும். |
| 6 | திரு. சந்தோஷ்குமார் – திருமுக்கூடல் | ♦ குவாரி வருவதால் பள்ளி மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுகிறது, வெளிப்புற சாலையில் செல்லாமல் ஊருக்குள் வருவதால் இடையூறு ஏற்படுகிறது, இரவில் வாகனம் ஊருக்குள் வரக்கூடாது,<br>♦ பள்ளி நேரத்திற்கு ஊருக்குள் வராமல் இருக்க வேண்டும், வாகனத்தில் முகப்பு மின் விளக்கு சரியாக இருக்க வேண்டும்.<br>♦ அனைத்து லாரிகளும் தார்பாயினால் மூடி கற்களை ஏற்றி செல்வதில்லை. அதிகமாக சாலையில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுகிறது, தார்பாய் மூலம் மூடிய பிறகு கற்களை ஏற்றிச்செல்லவேண்டும். |
| 7 | திரு. முருகன், | ♦ வேறு எந்த பிரச்சனையும் இல்லை, பள்ளி |

| | | |
|---|---|---|
| | திருமுக்கூடல் | நேரத்தில் லாரிகள் ஊருக்குள் செல்வது இடையூறாக உள்ளது, அதை சரி செய்தால் போதுமானது. |
| 8 | திரு.மாதவன்,<br>சிறுமயிலூர் | ♦ இந்த குவாரி வருவதால் வேலைவாய்ப்பு அதிகமாக இருக்கும். சிறுதாமூர் ஊராட்சி இல்லாமல் எங்கள் திருமுக்கூடல் ஊராட்சியிலும் வாகனம் செல்வதால் சாலை பழுதடைந்து உள்ளது, சாலைகளை சரி செய்ய வேண்டும், மூன்று நேரமும் தண்ணீர் தெளிக்க வேண்டும், வாகனம் செல்வதால் இடையூறு அதிகமாக இருக்கிறது, அதை சரி செய்ய வேண்டும். |
| 9. | திரு.அஜித்,<br>அருங்குன்றம். | ♦ இங்குள்ள குவாரிகள் 2002-2003 இல் இருந்து இயங்கி வருகிறது, சிறுதாமூர் கிராமத்தில் 5 மலைக்குன்றுகள் அழிக்கப்பட்டு உள்ளது, கற்கள் ஏற்றி செல்ல 30 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கிறது, 300 ஏக்கர் விவசாய நிலம் குவாரி உரிமையாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு ஆடு, மாடு மேய்க்க கூட இடமில்லாமல் மக்கள் அவதிப்படுகின்றனர், மக்கள் மிகவும் பின்தங்கி உள்ளார்கள், விவசாயம் முழுவதும் அழிக்கப்படுகிறது.<br>♦ கழிவுகள் ஏரிகளில் கலந்து மாசுபட்டு ஆடு, மாடுகள் தண்ணீர் குடிக்க கூட முடியவில்லை, 20 வருடமாக குவாரி இருக்கிறது. மேலும் எதற்கு குவாரி அனுமதி தருகிறீர்கள், குழந்தைகள் பள்ளிக்கு செல்லமுடியவில்லை, குண்டும் குழியுமாக உள்ளது, எல்லாரும் சாலை பிரச்சனை என்கிறார்கள், விவசாயமே பிரச்சனையாக உள்ளது, முன்பு கிட்டதட்ட 100 ஏக்கருக்கு விவசாயத்தில் தண்ணீர் பாய்ந்தது, தற்போது கால்வாய்களில் தண்ணீர் செல்வதில்லை, 100-க்கு மேற்பட்ட கால்வாய்கள் அழிக்கப்பட்டுள்ளன, இதற்கு மேல் எப்படி மக்கள் முன்னேற முடியும், மாடு, ஆடு வளர்த்தால் தான் கிராமத்தில் பிழைப்பு நடத்த முடியும், விவசாயம் அடியோடு அழிந்துள்ளது, எனவே இங்கு குவாரி வேண்டாம், மேலும் மேலும் அனுமதி கொடுக்கவேண்டாம் என ஊர்மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். |
| 10 | திரு.P.சரவணன், பட்டா | ♦ சிறுதாமூர் ஊராட்சியில் குவாரி வருவதால் சில பிரச்சனைகள் இருக்கிறது, திருட்டு அதிகமாக நடக்கிறது, மக்கள் அதிகமாக பயத்தில் இருக்கின்றனர். CCTV கேமரா ஊராட்சிக்கு வேண்டும், லாரிகள் ஊருக்குள் அதிகமான |

| | | |
|---|---|---|
| | | வேகத்தில் செல்கிறது, வேகத்தை கட்டுப்படுத்த வேண்டும், கிரஷரில் தூசிகள் அதிகமாக பறக்கிறது, தண்ணீர் தெளிக்க வேண்டும், கால்வாய்கள் மூலம் ஏரிக்கு நீர் வரத்து இல்லை, கால்வாய்கள் சீரமைத்து தர வேண்டும், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதி செய்து தர வேண்டும், பஞ்சாயத்து தீர்மானம், இல்லாமல் குவாரி வருகிறது . குத்தகை காலம் முடிவுற்ற குவாரிகளுக்கு கம்பி வேலி அமைக்க வேண்டும். |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், ஏனைய அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல்தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கூட்ட முடிவில் நேரடியாக பெற்ற மனுக்கள் அனைத்தும் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தகுதிவாய்ந்த அலுவலர் /
மாவட்ட வருவாய் அலுவலர், (நி.எ)
தேசிய நெடுஞ்சாலை,
காஞ்சிபுரம்.